**செய்தி வெளியீடு எண்:365** **நாள்: 12.06.2017**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (12.6.2017) தலைமைச் செயலகத்தில், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் வாடிக்கையாளர்களுக்கு ஏடிஎம் அட்டைகளையும், விவசாயிகளுக்கு ருபே விவசாயக் கடன் அட்டைகளையும் வழங்கி, 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் புதிதாக நிறுவப்பட்டுள்ள 40 ஏடிஎம் இயந்திரங்களின் சேவையையும் துவக்கி வைத்தார்கள்.

பிற வங்கிகளுக்கு இணையாக வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்கும் பொருட்டு, மைய வங்கியியல் சேவை (Core Banking Solutions) 2012–ஆம் ஆண்டு முதல் கூட்டுறவு வங்கிகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அடுத்தக்கட்ட நடவடிக்கையாக, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் 19 லட்சம் வாடிக்கையாளர்கள் பயன்பெறும் வகையில் ஏடிஎம் அட்டைகள் வழங்கும் சேவையை துவக்கி வைக்கும் விதமாக 6 வாடிக்கையாளர்களுக்கும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் பயிர்க்கடன் பெறும் விவசாயிகளில், மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் கணக்கினை துவக்கியுள்ள 4.56 லட்சம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ருபே விவசாயக் கடன் அட்டைகளை வழங்கும் சேவையை துவக்கி வைக்கும் விதமாக 5 விவசாயிகளுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று ஏடிஎம் அட்டைகளையும், ருபே விவசாயக் கடன் அட்டைகளையும் வழங்கினார்கள்.

மேலும், இதர வங்கிகளின் வாடிக்கையாளர்கள் மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் வாடிக்கையாளர்களும் பயன்பெறும் வகையில் 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் புதிதாக நிறுவப்பட்டுள்ள 40 ஏடிஎம் இயந்திரங்களின் சேவையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள்.

இதன்மூலம், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் வாடிக்கையாளர்கள் மற்றும் விவசாயிகள், ஏடிஎம் அட்டை மற்றும் ருபே விவசாயக் கடன் அட்டை வாயிலாக

இந்தியாவிலுள்ள அனைத்து ஏடிஎம் இயந்திரங்களிலும் பணப் பரிவர்த்தனை மேற்கொள்ளலாம்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செல்லூர் கே. ராஜூ, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு.அ. ஞானசேகரன், இ.ஆ.ப., தமிழ்நாடு மாநிலத் தலைமை கூட்டுறவு வங்கியின் தலைவர் திரு. ஆர். இளங்கோவன், வங்கியின் மேலாண்மை இயக்குநர் திரு.இரா. கார்த்திகேயன், நபார்டு வங்கியின் முதன்மை பொது மேலாளர் திரு.எஸ். நாகூர் அலி ஜின்னா, நபார்டு வங்கியின் பொது மேலாளர் திரு.ஏ.கே. பாடி, துணை பொது மேலாளர் திருமதி எஸ். விஜயலட்சுமி, ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 12.6.2017**